DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC No.108/2023

Deposition of Witness for – Prosecution :PW1
Defence :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவீந்தரநாத் | ஜாதி | : | |
| த/பெ | : | ஏழுமலை | மதம் | : | |
| கிராமம் | : | முகப்பேர் | தொழில் | : | வழக்கறிஞர் |
| வட்டம் | : | சென்னை | வயது | : | 65/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி - 25.08.2025**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>: PW1**

1. இவ்வழக்கில் குறிப்பிட்ட பணமானது வட்டிக்காக கொடுத்தேனா, கடனுக்காக கொடுத்தேனா அல்லது சீட்டுத்தொகையா என்றால் 2 வது சீட்டுக்குறிய தொகை ஞாபகமில்லை, ரூ.5,00,000/- த்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அது சீட்டு பணம் மற்றும் ரொக்கமாக வாங்கிய பணமும் சேர்ந்தது ஆகும். எந்த வருடத்தில் கடன் கொடுத்தேன்என்றால் 2017 ஆம் ஆண்டு. எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகார் மனுவில் 2017 ஆம் ஆண்டு ரூ.5,00,000/- கொடுத்ததாக தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் ரூ.5,00,000/- ரொக்கமாக கொடுத்தேன் என்று காணப்படவில்லை என்றால் இல்லை. ரூ.5,00,000/- த்தில் சீட்டு தொகையானது ரூ.3,84,000/- ஆகும், ரூ-1,16,000/- எதிரி என்னிடம் சில்லறை கணக்காக கடன் வாங்கினார். மேலே குறிப்பிட்ட பணபரிவத்தனை 2017 ஆம் ஆண்டு நடந்தது. 2017 ஆம் ஆண்டிற்கு பின்பு 2 ம் முறை போட்ட சீட்டாக ரூ.3,60,000/- கொடுத்தார். எதிரி என்னிடம் சீட்டு எதுவும் எடுக்கவில்லை என்றும், எதிரிக்கும் எனக்குமிடையே எந்த ஒரு பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

2. எனது மனைவிக்கும் எதிரியின் கணவருக்கும் தான் சீட்டு பணம் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது என்றால் சரியல்ல. சட்டப்படி எனது மனைவி தான் எதிரியின் கணவரிடம் பணம் கேட்க வேண்டும் என்றும் எனக்கு இவ்வழக்கு நடத்த அதிகாரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 காசோலை எனது முன்பாக எதிரி நிரப்பினாரா என்றால் Postal மூலம் அனுப்பினார். யார் பெயரில் காசோலை தபால் மூலமாக வந்தது என்றால் கண்ணன் பெயருக்கு வந்ததா எனக்கு வந்ததா என்று ஞாபகமில்லை. காசோலையில் கையெழுத்து Ball point பேனாவிலும் மற்ற விவரங்கள் Ink பேனா வைத்து நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் குறிப்பிட்ட தேதியன்று வங்கியில் செலுத்தினேனா என்றால் ஞாபகமில்லை. வங்கியில் காசோலை என்று செலுத்தினேன் என்று வழக்கறிஞருக்கு தான் தெரியும். வழக்கு காசோலை 2 முறை வங்கியில் செலுத்தினேன். எதற்காக 2 முறை வங்கியில் செலுத்தினேன் என்றால் முதல் முறை காசோலை வங்கியில் செலுத்தியபோது எதிரியின் சொத்து விற்பனை செய்வதாக உள்ளதாக கண்ணன் தெரிவித்ததின் பேரில் காசோலையை தற்போது செலுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால் செலுத்தவில்லை, 2 வது முறை தான் வங்கியில் செலுத்தினேன்.

3. எதிரியிடம் நேரடியான சொத்து விற்பனை செய்யபோவதாக கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் பரிவர்த்தனை அனைத்து 2015, 2017 ல் நடந்ததால் தற்போது இவ்வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. கடன் வாங்கிய நாளில் இருந்து 3 ஆண்டுகளுக்குள் தான் கடனின் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் சரிதான். ஆனால் எங்களிடையே பரிவர்த்தனை நடந்துகொண்டே இருந்தது. 2019 ஆம் ஆண்டு நான் எதிரியை பார்க்கவில்லை, எந்த பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 2020 ஆம் ஆண்டில் எதிரி கைப்பட தரவேண்டிய கடன் குறித்து எழுதி கொடுத்தார், ஆனால் அதில் கையெழுத்து இல்லை. என் மனைவிக்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் என் மனைவிக்கும் எதிரியின் கணவருக்கும் இடையே தான் பணபரிவர்த்தனை நடந்ததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது மனைவி தற்போது வசிக்கும் விலாசம் தெரிவிக்க முடியுமா என்றால் நீதிமன்றத்திற்கு தேவைப்பட்டால் தெரிவிக்கிறேன்.

மறுவிசாரணை இல்லை.

Digitally signed by
Tmt.K.Mahasakthi.B.B.A.,L.L.B.,(Hons)